# கிளி/ஆதவன் முன்பள்ளி
# KN/ATHAVAN PRE SCHOOL

பதிவு எண் NPE KN/21

## எனது நண்பர்கள்
## MY FRIENDS



# 19வது ஆண்டு சிறப்பு மலர்

2014ம் ஆண்டு முன்பள்ளிக் கல்வியை நிறைவு செய்து பாடசாலை செல்லும் மாணவர்கள்.

கிளிநொச்சி. Kilinochchi.

Digitized by Noolaham Foundation.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி/ ஆதவன் முன்பள்ளி



## வது
# 19
# ஆண்டு மலர்


**2014ல் முன்பள்ளிக் கல்வியைப்**
**பூர்த்தி செய்து 2015ல்**
**தரம் 01 ல் கால்பதிக்கும்**
**மாணவச் செல்வங்களின்**
**புகைப்படங்களைத் தாங்கிய**
**"எனது நண்பர்கள்"**
எனும் மழலைகளின் மலர்.

**2014**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதவன் முன்பள்ளிக் கீதம்



இராகம்-ஹம்சத்வனி

தாளம் -ஆதி

### பல்லவி

வாழ்த்துவோம் வாழ்த்துவோம் வாழ்த்துவோமே
ஆதவன் முன்பள்ளி மாதாவை வாழ்த்துவோம்
(வாழ்த்.................)

### சரணங்கள்

வன்னி நகர் கிளிநொச்சி வளங்கொழிக்கும் தரணியிலே
வந்துதித்துப் பணிசெய்யும் அழகுமிகு கதிரொளியே
நீலவர்ண ஜாலத்துடன் நின்றொளி பரப்பிடுவாய்
நித்தமும் பாலருக்குச் சங்கத்தமிழ் ஊட்டிடுவாய்
(வாழ்த்.................)

கடமை கண்ணியம் கட்டுப்பாட்டுணர்வுடனே
கல்விபல ஊட்டி வரும் ஆசிரியர் தலைமையிலே
அனுதினமும் அயராது அருந்தொண்டு ஆற்றிடுவாய்
அன்புடனே பாலர் எமை அரவணைத்துக் காத்திடுவாய்
(வாழ்த்.....................)

அன்னை தந்தை தாழ்பணிந்து குரு தெய்வபக்தியுடன்
ஆன்றோர்கள் வாக்கை அருமருந்தாய் தினம் மென்று
நாளைய ஞாலமதில் நன்னெறிகள் தழைத்தோங்க
நற்பணிகள் ஆற்றக் கதாநாயகர்களைத் தந்திடுவாய்.
(வாழ்த்......................)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வா!ழியவே!

வானமளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம்வீசி
இசைகொண்டு வாழியவே!

எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினைதரு தொல்லையகன்று
சுடர்க தமிழ்நாடே!

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!

வானம் அறிந்த தனைத்து மறிந்து
வளர்மொழி வாழியவே!

சுப்பிரமணிய பாரதியார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோர் ஆசிரியர் சங்கம்

| | |
|---|---|
| தலைவர் | சி. மகேந்திரராஜா |
| உப தலைவர் | சு.லோகநாதன் |
| செயலாளர் | க. நிர்மலா |
| பொருளாளர் | சி.பூமா |
| உறுப்பினர்கள் | நே.ஜெயந்தி |
| | லி.மாலினி |
| | ஜெ.ஜெயாணி |
| | த.உதயா |
| | வ. குணபாலசிங்கம் |






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர் வெளியீட்டுக் குழு

சி. குகதாஸ்
தி. தேவராசா
த. திவாகர்
மொ. அமாணியா
பொ. பிரகலாதன்
இ. ரவீந்திரன்
த. ரஜனிதாசன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதவன் அனைவரது மனங்களிலும் புகுந்தவன்

ஆதவன் முன்பள்ளியின் கடந்த 16 வருடகால சேவையுடன் இணைந்தவன் என்ற வகையில் உங்களுடன் சில வரிகள் உடுவில் மகளிர் கல்லூரியில் பொருளியல் ஆசிரியராகவும் யாழ்ப்பாணத்தில் தனியார் கல்வி நிலையங்களில் பொருளியல் ஆசிரியராகவும் கடமை புரிந்த நான் கிளிநொச்சி வந்தபோது கிளிநொச்சி நகரம் மக்களால் நிரம்பி வழிந்தது. பாடசாலைகள், தனியார்கல்வி நிறுவனங்கள் என்பன மாணவர் எண்ணிக்கையால் நிரம்பியிருந்தது.

இதனால் கந்தபுரத்தில் திருமதி கந்தையா ஞானம்மா அவர்களின் காணியில் (இல 65) கல்விப்பணியை ஆரம்பித்து பொருளியல் பாடத்தைக் கற்பித்துக்கொண்டிருந்தேன். மாணவர்களினதும், பெற்றோர்களினதும் வேண்டுதல்களுக்கமைவாக கல்வி நிலையப் பணி விரிவடைந்தது. க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பாடங்களுடன், தரம் 1 தொடக்கம் க.பொ.த சாதாரணதரம் வரையிலான வகுப்புக்களும் G.A.Q,Spoken English என்பவற்றுடன் தையல், தலையலங்காரம், பூவேலை, கேக் ஐஸிங் போன்ற முறைசாராக் கல்வியும் கற்பிக்கப்படும் ஓர் இடமாகக் காணப்பட்டமையால் சமூகத்தில் பலரது நன்மதிப்பையும் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது.

இந்நிலையில் முன்பள்ளிக்கல்வியையும் ஆரம்பிக்க வேண்டும் என்ற பலரது வேண்டுகோளுக்கு அமைய முன்பள்ளி சேவையையும் ஆரம்பித்ததோடு சிறுவர் கலைவிழா, விளையாட்டுவிழா, நவராத்திரி, ஏடுதொடக்குதல், சிறுவர்தினம், ஆசிரியர்தினம் போன்ற நிகழ்வுகள் எமது நிலையத்தினூடாக முன்னெடுக்கப்பட்டது. 1ம் ஆண்டு நிறைவில் கலைவிழா நடைபெற்ற போது அப்போதைய கல்விப்பணிப்பாளர் அமரர் பொன்சபாபதி அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டது மட்டுமன்றி நிகழ்வு ஆரம்பமானது தொடக்கம் அது முடிவடையும் வரை அமர்ந்திருந்து நிகழ்வுகளைக் கண்டுகளித்ததுடன் தனது சிறப்புரையின் மூலம் எமக்கு ஆசியையும் உற்சாகத்தையும் வாழ்த்தையும் கூறியிருந்தார். இது அப்போதே எம் பணிக்குக் கிடைத்த பெரிய அங்கீகாரமும், மதிப்புமாக இருந்தது.

இவ்வாறு தொடர்ந்து வந்த ஆண்டுகளில் மாணவர்களின் எண்ணிக்கையும் ஆசிரியர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துவந்து தற்போது 200 வரையான மாணவர்களையும் 9 ஆசிரியர்களையும் கொண்டு அனைவராலும் பெரிதும் விரும்பப்படும் முன்பள்ளியாகக் காணப்படுகின்றது. இது எம்முன்பள்ளி சேவையை பெற்றோரும் சமூகமும் ஏற்று அங்கீகரித்தமைக்கான மற்றுமோர் சான்றாகும்.

எம் முன்பள்ளியைப் பொறுத்தவரையில் சிறுவர்களுக்கான கல்விப்பணியை ஆட்டம், பாட்டு, விளையாட்டு , கதை கற்றல்களாக முன்னெடுத்து வருகின்றது. பல்வேறு இடர்கள் துன்பங்கள் மத்தியிலும் காலத்திற்கு காலம் மேற்கொள்ளப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைவிழா, நவராத்திரிவிழா, சிறுவர்தினம், ஆசிரியர்தினம், கண்காட்சி, ஒளிவிழா என்பன தவறாது நடைபெற்று மழலைகள் மகிழ்வாகவும், உற்சாகமாகவும், எதற்கும் முன்வருபவர்களாகவும், இரசனையுடையவர்களாகவும் ஆக்கத்திறன் உடையவர்களா கவும், கூட்டுமனப்பான்மை கொண்டவர்களாகவும் வளர வழிவகுத்து வருகின்றது.

இந்நிகழ்வுகளை பார்வையிடுவதற்கு ஏராளமான மக்கள் வருவதும், விருந்தினர் களாக துறைசார்ந்த பெரியோர்கள் பங்கு பற்றுவதும், வாழ்த்தி ஆசிகூறுவதும், பாராட்டுவதும், நிகழ்வுகளில் இறுதிவரை இருந்து சிறப்பிப்பதும் எம் வளர்ச்சிக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தருவதாக அமைகின்றது.

ஓர் ஆரம்பப் பாடசாலைக்குரிய அடிப்படை வசதிகள் எவையும் அற்றநிலையிலும் பௌதீக வளங்கள் இல்லாத நிலையிலும் உடல், உள உழைப்பினை உச்சகட்டமாகப் பயன்படுத்தி புழுதி மண்ணிலும் மாமர நிழலிலும் ஓலைக் கொட்டிலுமாகத் தவழ்ந்து எழுந்து நடந்து இன்று ஓரளவு வசதிகளுடன் முன்பள்ளி நிமிர்ந்து நிற்கின்றது.

குடும்ப, பொருளாதார, சமூக அடிப்படையில் பல்வேறு சூழல்களில் இருந்து அன்னை மடியில் அரவணைத்த பிள்ளைகள் முன்பள்ளிவரும் போது குழந்தைகளைப் பள்ளி வாசலில் வைத்து எந்த வேறுபாடுமின்றி தலையைத்தடவி, முதுகினைவருடி, காலை வணக்கம் கூறி அனைத்துக் குழந்தைகளையும் முன்பள்ளி வளாகத்திற்குள் வரவேற்று அவர்களின் தன்னந்தனிமையைப் போக்கி உள்ளத்தில் நம்பிக்கையையும் அன்பையும் ஊட்டி கற்பித்தல், கற்றல் சூழலிற்கு கொண்டு வருவதில் எம் ஆசிரியர்களின் பணி முன்பள்ளி வளர்ச்சிக்கு உந்து சக்தியாக அமைகின்றது.

முன்பள்ளியால் முன்னெடுக்கப்படும் ஒவ்வொரு நிகழ்வுகளிலும் அனைத்துப் பிள்ளைகளையும் பங்குகொள்ளச் செய்வதும் அனைவருக்கும் பரிசுப்பொருட்கள் வழங்குவதும், செயற்பாடுகளுக்கான செயலட்டைகள் தயாரித்து வழங்குவதும் பிள்ளைகளை மகிழ்ச்சியடையச் செய்யும் செயல்களாக அமைகின்றன. பள்ளி வாசலில் வைத்து ஆசிரியர்களால் பொறுப்பேற்கப்படும் ஒவ்வொரு பிள்ளைகளும் மீண்டும் பள்ளிச் செயற்பாடு முடிவடைந்து பெற்றோரிடம் ஒப்படைக்கப்படுகையில் சிலநேரங்களில் மாலை நேரத்தைக் கடந்து இரவாவதுமுண்டு. சிலவேளை பிள்ளைகளை அவர்கள் வீட்டிற்குச் சென்று ஒப்படைக்கும் நிலை காணப்படும்.

நேரந்தவறாமை, பெற்றோர் ஆசிரியர் கூட்டங்களை ஒழுங்காக நடாத்துதல், அவர்களின் நேரத்தில் ஒரு நிமிடத்தைக்கூட வீணாக்காமை, பெற்றோர்களின் ஆலோசனையைப்பெறல், பெற்றோர் ஆசிரியர்களுக்கிடையிலான நட்புறவுடனான தொடர்பாடல் வீட்டில் பிள்ளையை கற்கத் தூண்டுதல் என்பனவும் எம் முன்பள்ளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்வுக்கு பங்காற்றும் பலமான காரணங்களாயின.

இவ்வாறான பாரிய பொறுப்புக்கள் சவால்கள் நிறைந்ததாகவே, முன்பள்ளிச் செயற்பாடும் காணப்படும். ஒவ்வொரு பெற்றோரும் பிள்ளைகளும் ஒவ்வொரு வகையினராகக் காணப்படும் நிலையில் பிள்ளைகள் ஒவ்வொருவரினதும் மனங்களை வென்று நீண்ட காலம் நின்று நிலைத்து சமூக மதிப்பை பெறுவதென்பது சிக்கலானதே ஆகும்.

இவற்றைவிட ஆசிரியர்களை எமது முன்பள்ளி செயற்பாட்டிற்கு ஏற்றவகையில் தயார்ப்படுத்துவது எம்மால் பயிற்றப்பட்டவர்கள் வெவ்வேறு காரணங்களால் விலகிச் செல்வது புதியவர்களை உள்வாங்கி அவர்களை பயிற்றுவிப்பது, பெற்றோர்களிடமிருந்து உதவு தொகைகள் மற்றும் ஏனைய செயற்பாடுகளுக்கான நிதிகளை முழுமையாகப் பெறமுடியாமை, நிகழ்வுகளுக்குப் பிள்ளைகளைத் தயார்ப்படுத்தும்போது அவர்களை பெற்றோர் ஒழுங்காக அனுப்பி வைக்கத் தவறுதல், பிள்ளைகளை உரிய நேரத்திற்கு அழைத்துச்செல்ல தவறுதல் என்பவை முன்பள்ளியின் சீரான முழுமையான செயற்பாட்டிற்கு பாதகமாகவே அமைகின்றன.

எனினும் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான செயற்பாடு பெருமளவான பெற்றோரின் பூரண ஒத்துழைப்பு முன்பள்ளியுடன் தொடர்புடைய ஏனைய நிறுவனங்கள், துறைசார்ந்தோரின் வழிகாட்டல், ஆலோசனைகள், சமூகத்தில் உள்ள ஒவ்வொருவரும் எம்முடன் கொண்டுள்ள நட்பு, அன்புரிமையுடனான தொடர்பு என்பன எமக்கு எம்பணியை நல்லமுறையில் முன்னெடுத்துச் செல்ல பலமான காரணிகளாக உள்ளன.

குறிப்பாக இம்முன்பள்ளியின் தேவை இம்மாவட்டத்திற்கு அவசியமானதென குறிப்பிட்டு மீண்டும் மீள்குடியேற்றத்தின் பின்னர் இதனை செயற்படுத்த பக்க பலமாக இருந்த கிளிநொச்சி அரச அதிபர் திருமதி. ரூ.கேதீஸ்வரன் அவர்களிற்கு நன்றி கூறுகின்றேன். அத்துடன் எம் செயற்பாட்டிற்கு பூரண உதவியும் ஆதரவும் வழங்கும் மாகாணக்கல்வி அமைச்சின் முன்பள்ளிப்பிரிவு குறிப்பாக அதன் உதவிக்கல்விப் பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையா, கிளி வலய கல்விப்பணிப்பாளர் முன்பள்ளி உதவிக்கல்விப்பணிப்பாளர் திரு.விந்தன் ஆகியோரின் ஆலோசனைகள், வழிகாட்டல்கள் எம்முன்பள்ளியின் வளர்ச்சிக்கு பக்கபலமாக உள்ளன.

**சிவசம்பு மகேந்திரராஜா**
**கிளி/ஆதவன் முன்பள்ளி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

மழலைகளின் கல்வியில் கருத்தூன்றி செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற கிளிநொச்சி ஆதவன் முன்பள்ளியின் சேவைதனை நான் மனமார வாழ்த்துகின்றேன்.

இந்த முன்பள்ளியானது வருடாவருடம் பல்மொழித்திறன் பேசும் மழலைகளை உருவாக்கி இந்த மண்ணிற்கு உரம் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. உண்மையில் எமது மாவட்டத்தின் விளை நிலங்களில் ஒன்றாக இந்த முன்பள்ளி செயல்பட்டுக் கொண்டிருப்பது என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மை.

"இக்கால சிறுவர்கள் வரும்கால மண்ணின் சொத்துக்கள்" இந்த நிலையினை அனைவருக்கும் உணர்த்த பன்மொழிக் கல்வியை இனிதே இச்சிறுவர்களுக்கு புகட்டி வரலாற்றில் புதிய அத்தியாயத்தை உருவாக்க களம் அமைத்து வருகின்றனர். இதற்கு ஊக்கமும் ஒத்தாசையும் வழங்குகின்ற அதிபர். ஆசிரியர் பெருந்தகைகளை நாம் மனமார வாழ்த்துகின்றோம்.

இச் சிறுவர்களுக்கு வழங்கப்படுகின்ற கல்வியும் அதனோடு இணைந்த இணைப்பாட விதான செயற்பாடுகளும் இவர்களின் ஆழ்மனதில் ஆழமாகப் பதிந்து வருங்கால வாழ்விற்கு புத்துயிர் ஊட்டுகின்றன.

இம் மழலைகளின் வாழ்வு தொடர்ந்தும் வளம் பெற நான் ஆசித்து நிற்கின்றேன்.

அருட்திரு ம. அன்ரன் அமலதாஸ்
பங்குத்தந்தை
உருத்திரபுரம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறு துளிகள்



- இன்றைய உணர்ச்சிகளே நாளைய சாட்சிகளாகும்.
- இலட்சியம் இல்லாத வேலை எண்ணெய் இல்லாத விளக்குகளுக்குச் சமம்
- எந்த பேச்சானாலும் தீர ஆலோசனை செய்த பிறகே பேசவேண்டும்.
- பணம் பேசத் தொடங்கும் போது உண்மை ஊமையாகி விடுகிறது.
- இளமையில் சூதாடுபவர்கள் முதுமையில் பிச்சை எடுப்பார்கள்.

பிரதீபன் நரேஸ்மன்

## சிந்திக்க....



- போதைக்கு அடிமையாகாதே, புதை குழிக்குள் விழுந்து விடுவாய்
- பணத்துக்கு அடிமையாகாதே, குணத்தை இழந்துவிடுவாய்.
- புகழ்ச்சிக்கு அடிமையாகாதே, மகிழ்ச்சியை இழந்து விடுவாய்
- கோபத்துக்கு அடிமையாகாதே, ஆபத்தில் வீழ்ந்திடுவாய்.
- உணர்ச்சிக்கு அடிமையாகாதே, உன்னையே இழந்து விடுவாய்
- அன்பிற்கும் அறிவிற்கும் அடிபணி, அத்தனையும் பெற்றிடுவாய்.

குகதாஸ் அபிநயா

## அறிந்து கொள்ளுங்கள்



- குதிரையின் கர்ப்பகாலம் – 11 மாதங்கள்
- மனித உடலில் உள்ள உணவுக்குழாயின் நீளம் – 30 அடி
- முதலை சுமார் 7 மீற்றர் வரை வளரும்
- சிலந்தி ஒரு மணி நேரத்திற்கு சுமார் 112 மீற்றர் வரை நூலை உருவாக்கும்
- உலகில் முதன் முதலில் சைக்கிள் ரேஸ் நடந்தது பரிசில் 31.5.1868 இல் நடந்தது

கணேசன் துஸ்யந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதவன் அன்னையைப் போற்றுவோம்



✱ முன்பள்ளிக் கல்விதனை
முறையாகக் கற்றுத் தந்த
ஆதவன் பள்ளியாம்
அவனி போற்றும் முன்பள்ளியாம்

என்னைப் போல
என்னும் எத்தனை சோதரர்கள்
ஆதவன் பள்ளியிலே
ஆனந்தமாய் கற்பார்கள்

இலைமறை காயாய் உள்ள
இன்பமான உறவுகளை
இன்முகத்துடன் அரவணைக்கும்
இல்லம் தான் ஆதவன்

எத்தனை ஆண்டுகள் தான்
சென்றாலும்
வித்தைகள் பலவும் தந்தருளிய
ஆதவன் அன்னையை
ஆராதனை செய்து
போற்றுவோம். ✱

செல்வராசா சதுர்சனா

# கல்வி



✱ காலத்தால் அழியாத செல்வம்- கல்வி
இதனைக் கசடறக் கற்பதே மாணவர் நமது கடமை
கற்றுநல் வழிதனில் நடப்பதே நமது பண்பு
அப்போதே விளங்கிடும் அக் கல்வியின் சிறப்பு

நல் ஒழுக்கமும் கீழ்படிவும் உண்மையும்
சேர்ந்தே உயர்ந்திடும் தரமாய் - கல்வி
நாள்தோறும் கற்பதனாலே நன்றாக
விளங்கிவரும் - சுகமாய்

செய் நன்றி அறிதலும் அடக்கமுடையதுமாய்
சீர்பெற்று உலகில் நாம் வாழ்ந்திடவே
கல்வியுடன் புகழும் பெருமையும், அருளும்
அள்ளி வழங்கும் ஆதவன் முன்பள்ளியின்
இளமைக் கல்வி என்றும் -எம்மில்
சிலையில் எழுத்தே ✱

யேசுராசா சஞ்சிகா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகின் புனைப் பெயர்கள்



- உலகின் கூரை என்று புகழப்படுவது - **பமீர் பீடபூமி** -
- முத்துக்களின் தீவு என்று கூறப்படுவது-**பஹ்ரைன்**-
- வெள்ளை யானை பூமி எனப்படுவது- **தாய்லாந்து** -
- உலகின் புனித பூமி- **பாலஸ்தீனம்**-
- ஐரோப்பாவின் நோயாளி - **துருக்கி** -
- உலகத்தின் சர்க்கரைக் கிண்ணம்- **கியூபா**-

**ரவீந்திரன் லதுர்ஷன்**

## அறிஞர்களின் பொன் மொழிகள்



•எத்தனை குழப்பம் நேர்ந்தாலும் பொய்மை மறைந்துவிடும் மெய்மையே மேலே உயர்ந்து நிற்கும்.

•முள்நிறைந்த செடியிலே தான் முழு அழகு வாய்ந்த ரோஜாமலர் பூக்கிறது. அது போலவே சொல்லாணாத் துன்பங்களுக்கிடையிலே தான் உண்மை பூத்து மலர்கிறது.

•சமநிலத்தில் செல்லும் தேர்போல் நம்முடைய பேச்சும் போக வேண்டும் கீழ்த்தரமான பயனற்ற பேச்சுக்களில் இறங்கக்கூடாது.

•அறிவுள்ள மனிதர்களுடன் உரையாடு அறிவில்லாத மனிதர்களோடு உறவாடு ஆனால் பண்பில்லாதவரைக் கண்டால் ஒதுங்கிவிடு.

**கலைச்செல்வன் சஞ்சீபன்**

## பறவைச் செய்திகள்



- பென்குவின் பறவை நீருக்கு அடியில் பறக்கும் ஆற்றல் கொண்டது.
- கொக்கு நாரை ஆகியவை ஒற்றைக்காலில் நின்று தூங்கும்.
- நொயின் பறவை தூக்கத்திலும் பாடும் இயல்புடையது.
- கிரிபெஸ் என்ற பறவை உணவு கிடைக்காத போது தன்னுடைய சிறகுகளையே உணவாக உண்ணும்
- நீரை உறிஞ்சிக் குடிக்கும் ஒரே பறவை புறா.
- பறவைகளில் காகமே மிகவும் புத்திசாலியான பறவை.
- மிகச்சிறிய முட்டையிடும் பறவை தேன் சிட்டு
- மரங்கொத்தியின் அலகும் மண்டை ஓடும் ஒரே எலும்பாலானவை.

**விக்னேஸ்வரன் தரணிகா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவனமாக இருங்கள்



- எண்ணங்களைப் பற்றி கவனமாக இருங்கள். அவை வார்த்தைகளாக வெளியேறுகின்றன.
- வார்த்தைகளில் கவனமாக இருங்கள். அவை செயலாக மாறுகின்றன.
- செயல்களில் கவனமாக இருங்கள் . அவை ஒழுக்கமாக உயர்கின்றன.
- ஒழுக்கத்தில் கவனமாக இருங்கள். அது எமது வாழ்க்கை திறம்பட அமைய உதவுகின்றன.

**ஜெயகாந்தி டினோஜன்**

## புதினம் தெரியுமா?



இடி மின்னல் என்றழைக்கப்படும் நாடு எது? **பூட்டான்**

கப்பல்களின் சுடுகாடு என்றழைக்கப்படும் இடம் எது?

**சாகாஸோ கடல்**

அசாமின் துயரம் என அழைக்கப்படும் நதி எது?

**பிரம்ம புத்திரா**

அரபிக் கடல் ராணி என்றழைக்கப்படும் இடம் எது? **கொச்சின்**

திரவ தங்கம் என்றழைக்கப்புடுவது எது? **பெற்றோல்**

கனிம வாயுக் கிடங்கு என்றழைக்கப்படுவது எது? **கருங்கடல்**

முந்திரி , புகையிலையின் பூர்வீகம் என்றழைக்கப்படும் இடம் எது? **தென் அமெரிக்கா**

பறவைகளின் கண்டம் என்றழைக்கப்படும் இடம் எது? **தென் அமெரிக்கா**

தென்கிழக்கு ஆசியாவின் நுழைவாயில் என்று அழைக்கப்படுவது எது?

**சிங்கப்பூர்**

**திவ்யரூபன் ரிஷிக்கேஷ்**

## மனித உடல் பற்றிய தகவல்கள்



மிக நீண்ட எலும்பு- தொடை எலும்பு

உடலில் காணப்படும் மின்சாரத்தின் அளவு 25 வாற்ஸ்

உடலின் மென்மையான உறுப்பு மூளை

அமிலம் சுரக்கும் ஒரே இடம் இரைப்பை

**பாலச்சந்திரன் பகீரதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெரிந்துகொள்வோம்



- ஆண் இலையானின் ஆயுள் எத்தனை நாட்கள்
  அதிகபட்சம் 17 நாட்கள்
- கின்னஸ் என்றால் என்ன?
  உலக சாதனைகள் பற்றிய குறிப்பு எழுதி வைக்கப்படும் ஒரு புத்தகம்
- தையல் இயந்திரத்தை கண்டு பிடித்தவர் யார்?
  எலியாஸ் ஹோவ்
- சீக்கிய மதத்தை நிறுவியவர் யார்?
  குருநானக்
- தமிழ் ஆண்டுகள் எத்தனை ?
  அறுபது
- உலகில் மிகப்பெரிய பாலைவனம் எது?
  சஹாரா

**ரவிக்குமார் அரிகரன்**

## முயல் குட்டி



துள்ளித் துள்ளி ஓடிவரும் துடிப்பு மிக்க முயல்குட்டி
பள்ளிச்சிறுவர் எம்மனதை அள்ளிச் செல்லும் முயல்குட்டி
பதுங்கிப் பதுங்கிப் பாலர் நாம்
உன்னைப் பிடிக்க ஓடினால்

ஓடி ஒளித்துக் கொள்கிறாய்
ஒன்றும் அறியா முயல்குட்டி
அள்ளி அள்ளித் தழுவநான்
ஆசைகொண்டு வருகையில்

துள்ளித் துள்ளி ஓடாதே
துணிவு கொண்டு நின்றிடு.

**பிரபாகரன் துளசிகன்**

## மூன்று விடயங்கள்



1. மூன்று விடயங்கள் யாருக்காகவும் காத்திருப்பது இல்லை....
**நேரம், இறப்பு, வாடிக்கையாளர்கள்**
2. மூன்று விடயங்கள் சகோதர சகோதரிகளை விரோதியாக்கும்....**நகை, மனைவி, சொத்து**
3. மூன்று விடயங்கள் யாராலும் திருடமுடியாது....
**புத்தி, கல்வி, நற்பண்புகள்**
4. மூன்று விடயங்களை ஞாபகம் வைத்திருப்பது அவசியம்...
**உண்மை, கடமை, இறப்பு**
5. மூன்று விடயங்கள் வெளிவந்து திரும்புவதில்லை....
**வில்லிலிருந்து அம்பு, வாயிலிருந்து சொல், உடலிலிருந்து உயிர்.**


**தர்மசீலன் ஆதித்தியன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் தினம்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் தினம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்களுக்குத் தெரியுமா?



ஆபிரிக்க பறவை இனங்களில் ஒன்றின் பெயர்- **விதவை**

'பபு'என்றால் திபெத்திய மொழியில் **வியாழக்கிழமை** என்று அர்த்தம்

சூரியனின் கொள்ளளவு எத்தனை பூமிகளுக்கு சமம்? அதாவது சூரியனுக்குள் எத்தனை பூமிகளை வைக்கலாம் தெரியுமா?

**10 இலட்சம் பூமிகள்!**

எவரெஸ்டின் இப்போதைய உயரம் :- **29,028 அடி.**

**கமலநாதன் பகீரத்தனா**

## மூன்றுக்குப் பெருமை



| | |
|---|---|
| பொருள் | :- அறம், பொருள், இன்பம் |
| சுடர் | :- சூரியன், சந்திரன் , நெருப்பு |
| உலகம் | :- பூலோகம் , பரலோகம் , பாதாளலோகம் |
| தொழில் | :- ஆக்கல் , காத்தல் , அழித்தல் |
| அரசர் | :- சேரர் , சோழர் , பாண்டியர் |
| தமிழ் | :- இயல், இசை , நாடகம் |
| நூல் | :- முதல் , வழி, சார்பு |
| காலம் | :- இறப்பு, நிகழ்வு, எதிர்வு |
| இடம் | :- தன்மை, முன்னிலை , படர்க்கை |
| பாவினம் | :- தாழிசை , துறை, விருத்தம் |
| முப்பொருள் | :- பதி, பசு, பாசம் |
| மலம் | :-ஆணவம் , கன்மம், மாயை |

**கிருஸ்ணசெல்வம் டிலோஜா**

## பெருமை



| | |
|---|---|
| பொறி | :- மனம், வாக்கு, காயம் |
| குணம் | :- சாத்துவிகம், இராசதம் , தாமதம் |
| குற்றம் | :- காமம் , வெகுளி, மயக்கம் |
| சக்தி | :- இச்சாசக்தி , கிரியாசக்தி, ஞானசக்தி |
| தீ | :- ஆகவனீயம், தக்கிணாக்கினியம், காருகபத்தியம் |
| உயிர்த்தீ | :- உதரத்தீ, விந்துத்தீ, சினத்தீ |
| பிணி | :- வாதம், பித்தம், கபம் |
| கடுகம் | :- சுக்கு, திப்பிலி, மிளகு |
| காய் | :- கடுக்காய் , நெல்லிக்காய், தான்றிக்காய் |
| கனி | :- மா, பலா, வாழை |
| முந்நீர் | :- ஆற்றுநீர், ஊற்றுநீர், மழைநீர் |

**குணாலன் கேசனா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யுனெஸ்கோ பற்றிய சில தகவல்கள்....



1945 ஆம் ஆண்டு நவம்பர் 16ம் திகதி மனிதர்களின் மனதில் அமைதியை உருவாக்க இது அமைக்கப்பட்டது.
போரினால் பாரம்பரிய இடங்களை சீரழிவதைத்தடுக்கவே இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது.
உலகம் முழுவதும் இன்று 161 நாடுகளில் 1007 பாரம்பரியம் மிக்க இடங்கள் உள்ளன.
இவற்றில்... 779, கலாச்சார சிறப்புக்கொண்டவை
197 இயற்கை சார்ந்தவை
31 கூட்டாக அறிவிக்கப்பட்டிருப்பவை.

திவாகர் அபிராம்

## பருந்தாரே ... பருந்தாரே ....!!



அகல விரிந்த சிறகோடு
அழகாய்ப் பறக்கும் பருந்தாரே
சுகமாய் வானில் வட்டமிடும்
செய்தி என்ன சொல்வீரா?

கோழிக் குஞ்சைக் கண்டீரா?
கீச்சிடும் ஒலியை ரசித்தீரா?
கோலைச் சொண்டு உமிழ் நீரா?
கொத்திச் சுவைக்க நினைத்தீரா?

குலரமணன் நிலைக்சன்

## பொது அறிவு



- தமிழ்த் தாத்தா எனப் போற்றப்படுபவர் யார்?
  டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர்
- ஜய்பான் நாட்டின் தேசிய பறவை எது?
  கோழி
- உலகிலே சர்க்கரைக் கிண்ணம் என அழைக்கப்படும் நாடு எது?
  கியூபா
- மரகதத் தீவு என அழைக்கப்படும் நாடு எது?
  அயர்லாந்து

சிவானந்தமூர்த்தி புகழவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் தினம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்காட்சி நிகழ்வுகள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தித்துச் செயற்பட வேண்டும்

விவசாயி ஒருவன் தன் தொழில் நிமித்தம் வயலுக்கு அருகிலேயே வீட்டையும் கட்டியிருந்தான். அதனால் அடிக்கடி அவன் வீட்டிற்குள் பாம்பு எட்டிப் பார்த்தது. இதனால் அவன் கீரி ஒன்றை வளர்க்கலானான். காலம் சென்றது. அவனுக்கு திருமணமாகி குழந்தையும் பிறந்தது. ஒரு நாள் விவசாயியின் மனைவி குளக்கரைக்குத் தண்ணீர் எடுத்து வரச் சென்றிருந்தாள். அந்நேரம் பார்த்து ஒரு பெரிய பாம்பு வீட்டிற்குள் புகுந்து விட்டது. அப்போது கீரிக்கும் பாம்புக்கும் பலத்த சண்டை கடைசியில் கீரி பாம்பைக் கொன்றுவிட்டது. அந்நேரம் பார்த்து விவசாயியின் மனைவியும் வீட்டிற்குள் வந்தாள். கீரியின் வாயில் இரத்தத்தைப் பார்த்த அவள் தனது பிள்ளைக்கு ஏதோ விபரீதம் நடந்திருக்கிறது என எண்ணி தான் கொண்டு வந்த பானையைக் கீழே போட்டுவிட்டு பெரிய கம்பொன்றை எடுத்துக் கீரியை அடித்தாள் கீரியும் வலிதாங்காது இறந்தது.



தேவராசா
தீபிகன்

பிறகு உள்ளே சென்று பார்த்த போதே அவளுக்கு உண்மை தெரிந்தது தன் குழந்தையைக் காப்பாற்றிய கீரியை அடித்துக் கொன்றுவிட்டதை எண்ணி மிகவும் கண் கலங்கினாள்.

# சிறப்புப் பெயர்கள்



| | | |
|---|---|---|
| தெற்கின் பிரித்தானியா | - | நியூசிலாந்து |
| நள்ளிரவுச் சூரியன் தெரியும் நாடு | - | நோர்வே |
| சூரியன் உதிக்கும் நாடு | - | ஜப்பான் |
| நைல் நதியின் கொடை | - | எகிப்து |
| ஐரோப்பாவின் விளையாட்டு மைதானம் | - | சுவிற்சர்லாந்து |
| ஐரோப்பாவின் காப்பகம் | - | பெல்ஜியம் |
| ஐரோப்பாவின் நோயாளி | - | துருக்கி |
| புனித நாடு | - | பலஸ்தீனம் |
| உலகின் சர்க்கரைக் கிண்ணம் | - | கியூபா |
| தங்கப் போர்வை நாடு | - | அவுஸ்திரேலியா |
| மரகத்தீவு | - | அயர்லாந்து |
| பொற்கோபுர நாடு | - | பர்மா |
| சூரியன் மறையும் நாடு | - | இங்கிலாந்து |

சுரேந்திரகுமார் ஐஸ்வர்யா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முட்டை



- உலகிலேயே மிகப்பெரிய முட்டை 'ஓஸ்ட்ரிச்'எனப்படும் நெருப்புகோழியின் முட்டைதான். ஒரு முட்டையின் எடை மட்டுமே கிட்டத்தட்ட ஒன்றேகால் கிலோ இருக்கும் .
  றொபின் பறவையின் முட்டைகள் வெளிர் நீலத்தில் அழகாக இருக்கும். ஒரு நாளைக்கு ஒரு முட்டை வீதம் நான்கு முட்டைகள் மட்டுமே இட்டு அடைகாக்கும்.
- ஈமுக் கோழிமுட்டையும் நெருப்புக்கோழி முட்டையைப் போலவே கொஞ்சம் பெரிதாக இருக்கும். இந்த முட்டை 700 கிராம் எடை கொண்டதாகவும் கரும்பச்சை நிறத்திலும் காணப்படும்.
- 'ஹம்மிங் பேர்ட்'பறவையின் முட்டை தான் உலகிலேயே சிறிய முட்டை ஒரு பட்டாணிக் கடலையின் அளவுக்குத் தான் முட்டையின் அளவு இருக்கும்.

லோகநாதன் யானுஜன்

# வாழ்வில் முன்னேற



வாழ்க்கை ஒரு சவால் : அதைச் சமாளி.

வாழ்க்கை ஒரு பரிசு: அதைப் பெற்றுக் கொள்

வாழ்க்கை ஒரு சாகசம் : அதில் துணிவு காட்டு

வாழ்க்கை ஒரு சோகம்: அதை அடைந்துவிடு

வாழ்க்கை ஒரு கடமை : அதை முடித்துவிடு

வாழ்க்கை ஒரு விளையாட்டு அதில் பங்கு கொள்

வாழ்க்கை ஒரு துன்பம் : அதை எதிர்கொள்

வாழ்க்கை ஒரு புதிர் அதற்கு விடை காண்.

வாழ்க்கை ஒரு பாடல் : அதைப் பாடிவிடு.

வாழ்க்கை ஒரு வாய்ப்பு : அதைப் பயன்படுத்து.

சுந்தரலிங்கம் பபிதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறார்களின் கலைவிழா நிகழ்வுகள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகில் முதன் முதலாய்...!



♦ உலகில் முதன் முதலாக அஞ்சல்தலை வெளியிட்ட நாடு

- **இங்கிலாந்து.**

♦ உலகை முதன் முதலில் சுற்றி வந்த கப்பல்– **விக்டோரியா**

♦ உலகில் முதன் முதலாக பத்திரிகைகளில் கார்ட்டூன் படங்களை வெளியிட்ட நாடு - **இத்தாலி.**

♦ உலகின் முதல் முதலாக கண்வங்கியைத் தொடங்கிய நாடு

- **அமெரிக்கா.**

♦ உலகின் முதல் முதலாக அஞ்சல் தலையில் கழுதை படத்தை வெளியிட்ட நாடு - **கென்யா.**

♦ உலகின் முதன் முதலாக 1403 இல் சிறைச்சாலை ஏற்படுத்திய நாடு - **இங்கிலாந்து**

**விக்னேஸ்வரன் பர்மிதன்**

## சிந்தனைத் துளி..!



1. நல்ல செயல்களை நீயே முன்னின்று செய்.
2. உயர்ந்த எண்ணம் கொண்டவர்களுக்குத் தனிமை என்பதே இல்லை.
3. மகத்தான செயல்களின் மூலமே பேரின்பம் தோன்றுகின்றது.
4. ஒரு போதும் தவறு செய்யாதவன் ஒன்றுமே செய்யமாட்டான்.
5. கவலையை விட மிகவும் கொடியது. ஒருவனிடமுள்ள சந்தேகமாகும்.
6. இன்றைய உணர்ச்சிகளே நாளைய சாட்சிகளாகும்.
7. இலட்சியம் இல்லாத வேலை எண்ணெய் இல்லாத விளக்குக்குச் சமம்
8. எந்தப் பேச்சானாலும் தீர ஆலோசனை செய்த பிறகே பேச வேண்டும்.

**இரட்ணலிங்கம் சரவணன்**

## குறள் பழம்



திருக்குறள் பழம் பெரும் தமிழ் இலக்கியமாக இருந்தாலும், இதிலுள்ள 1330 குறள்களில் ஒரே ஒரு பழம்தான் இடம் பெற்றிருக்கிறது. அதுவும் இப்போது வெகு அரிதாக கிடைக்கும் பழம் - நெருஞ்சிப் பழம்

**சதீஸ்குமார் ஆகாஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிந்திக்க சில



01. வருடங்கள் இருக்கின்றன என்று நாட்களை வீணாக்கி விடாதே.

02. வாழ்வில் வெற்றி பெற நண்பன் தேவை ஆனால் வாழ்நாள் முழுவதும் வெற்றி பெற எதிரி தேவை.

03. அதிகமாக சிரிக்கும் மனிதன் தனது மனதில் மிகப் பெரிய காயத்தை வைத்திருப்பான்.

04. தன்னைத் தானே புகழ்பவன் தனக்குத் தானே இழப்பை உண்டுபண்ணிக் கொள்கின்றான்.

05. ஒருவன் அறிவைத் தேடிக் கொண்டிருக்கும் வரை தான் அவன் அறிவாளி.

பிரபாகரன் அஸ்வினி

## பூக்கள்



பூக்கள் நல்ல பூக்களாம்
பூத்து குலுங்கும் பூக்களாம்
பூசைக்காக நாம் அதை
புனிதமாக கொய்யலாம்

மல்லி , முல்லை ரோசாவாம்
மனம் பறிக்கும் பூக்களாம்
மாணவர்கள் நாம் அதை
மங்களமாய் கொய்யலாம்.

யோகேஸ்வரன் ஷதுர்ஜன்

## அறிந்துகொள்வோம்



தன் தவறை உணர்ந்து அடிபணிபவன் நேர்மையானவன்!
தனக்குத் தெரியாததை ஒத்துக் கொள்பவன் பண்டிதன்!!
எந்தத் தவறும் செய்யாமல் , எல்லாம் தெரிந்தும்
அடிமையாகிறவன் கணவன்!!!

சதீஸ்குமார் அர்ச்சணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெரிந்து கொள்வோம்



நீரிலே உருவாகும் பூ நீராலே அழியும் பூ -உப்பு
வாயிலே மலரும் பூ வந்து வந்து மறையும் பூ - சிரிப்பு
அவனியிலே தேவையாம் பூ இறைவனுக்குப் பொதுவான பூ -அன்பு
தண்டனைக்குரிய பூ தவறுக்கு ஒத்த பூ - தப்பு
நண்பனிடம் கொள்ளும் பூ நல்லவரிடம் காட்டும் பூ - நட்பு
தேய்ந்து அழியும் பூ தேயும் வரை தேடும் பூ - செருப்பு

**பாலசிறி மேகன்**

## மீன்



மீன்களின் இதயத்தில் மூன்று அறைகள் இருக்கும். மீனின் இதயம் ஒரு நிமிடத்துக்கு 40 முறை துடிக்கும். அதன் எலும்புக்குள் மஞ்ஞை இருக்காது தோலில் ஒரு திரவம் சுரக்கும். அது மீனின் உடம்பு முழுக்க வழவழப்பைத் தந்து, அவற்றை நம் பிடியில் இருந்து காப்பாற்றுகிறது.

**ஜெயகணேஸ் அபிநயா**

## வாழ்க்கை....



வாழ்க்கை ஒரு பயணம் :அதைக் கடந்து விடு.
வாழ்க்கை ஒரு வாக்குறுதி : அதைக் காப்பாற்று.
வாழ்க்கை ஒரு காதல் அதை அனுபவி.
வாழ்க்கை ஒரு வனப்பு :அதன் புகழ்பாடு.
வாழ்க்கை ஒரு போராட்டம் : அதனுடன் போராடு.
வாழ்க்கை ஒரு குழப்பம்: அதைத் தீர்த்துவிடு.
வாழ்க்கை ஒரு இலக்கு அதைத் தொடர்ந்து விடு.
வாழ்க்கை ஒரு தெய்வீகம் : அதனைப் புரிந்துகொள்.

**றமணன் அக்ஷயா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு



01. உலகிலே அதிக மழை பெறும் இடம் யாது?
சீராப்புஞ்சி

02. உலகிலேயே பெரிய நன்னீர் ஏரி யாது?
சுப்பீரியர் ஏரி

03. சூரியனை பூமி ஒருமுறை சுற்றிவர எடுக்கும் காலம் யாது?
365 நாள்கள் . 6 மணி 9 நிமிடம், 9.54 செக்கன்

04. உலகிலேயே மிக உயர்ந்த சிகரம் யாது?
எவரெஸ்ட்

05. உலகிலேயே பெரிய எரிமலை யாது?
லஸ்கார் (சிலி) 5,990 மீ.

06. உலகிலேயே மிக நீளமான மலை எது?
அந்தீஸ்மலை

யோகானந்த ராஜ் வேணுஜா

# சேவல் பூனையுடன் எலி



ஒரு குட்டி எலி தன் தாயுடன் வாழ்ந்து வந்தது. அது வெளி உலகத்தைக் கண்டதில்லை. ஒரு நாள் அது இரண்டு பிராணிகளைக் கண்டது.அது வீட்டுக்கு வந்து தன் தாயிடம் அவற்றைப்பற்றி விபரித்தது. " அம்மா நான் இன்று வித்தியாசமான இரண்டு பிராணிகளைப் பார்த்தேன். ஒன்று என்னைப் பார்த்து சினேகமாக சிரித்தது. அதன் வால் மிகவும் அழகாக இருந்தது. இன்னொன்று தலையில் சிவப்பாக எதையோ வைத்திருந்தது. தன் சிறகை அடித்துக் கொண்டு கூவியது. எனக்கு பயமாக இருந்தது என்று கூறியது.

நிசாந்தன் லக்சனா

தாய் எலி, குட்டி எலிக்குச் சொன்னது " நீ முதலில் பார்த்தது ஒரு பூனை. அதன் அருகே போகாதே. அது உன்னை விழுங்கிவிடும்" பின்பு பார்த்தது ஒரு சேவல் அதனால் எமக்கு எந்தத் தீங்கும் ஏற்படாது என்றது.

தாய் எலி தன் பிள்ளையை அணைத்துக் கொண்டு சொன்னது. 'வெளித்தோற்றத்தைப் பார்த்து எதையும் தீர்மானித்து விடாதே என் செல்லமே நண்பர் யார் பகைவர் யார் என்பதைக் காலம் உனக்குக் கற்றுத் தரும்" எனக் கூறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறார்களின் கலைவிழா நிகழ்வுகள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறார்களின் கலைவிழா நிகழ்வுகள்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுகதைகளும் விடைகளும்

01. வட்ட வடிவழகி , தண்ணீரில் வாழும் அழகி, வாடி வதங்கினால் வந்திடுவான் வீட்டிற்கு இவள் யார்?

02.வெள்ளைநிற மனிதனுக்கு கறுப்புத் தொப்பி அவன் யார் ?

03.பகலெல்லாம் ஊரைச் சுற்றுவான் இரவில் வீட்டு வாசலில் கிடப்பான் அவன் யார்?

04. ஐந்து வீடுகளிற்கு ஒரே வாசல் அது என்ன?

05. எங்கள் வீட்டுத் தோட்டத்தில் மஞ்சள் குருவி ஊஞ்சலாடுகிறது அது என்ன?



கமலநாதன் ரோமிதா

**விடைகள்**

தாமரை இலை , தீக்குச்சி, செருப்பு, உள்ளங்கை, பூசணிக்காய்

# அறிந்து கொள்ளுங்கள்...

சிட்டுக்குருவிகளின் முட்டை இளம் பழுப்பு நிறத்தில் அடர் பழுப்பு வண்ணப்புள்ளிகளுடன் காணப்படும்.
காசோவரி பறவையின் முட்டைகள் இளம் பச்சை, நீலமும் பச்சையும் கலந்த நிறங்களில் காணப்படும். ஒரே நேரத்தில் 8 முட்டைகள் வரை இடும்.

சிட்டுக்குருவிகளின் முட்டை இளம் பழுப்பு நிறத்தில் அடர் பழுப்பு வண்ணப்புள்ளிகளுடன் காணப்படும்.

காசோவரி பறவையின் முட்டைகள் இளம் பச்சை, நீலமும் பச்சையும் கலந்த நிறங்களில் காணப்படும். ஒரே நேரத்தில் 8 முட்டைகள் இடும்.

மயில்கள் அடர்பழுப்பு வண்ணத்தில் முட்டைகளை இடும். ஒரே நேரத்தில் 4 முதல் 8 முட்டைகள் வரை இட்டு அடைகாக்கும்.



கனகலிங்கம் ரிஷானிக்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் ஓர் விஞ்ஞானியானால்



♣நான் ஒரு விஞ்ஞானியானால் எனக்கு மட்டுமன்றி நம் நாட்டுக்கும் பெருமை சேர்ப்பேன்

♣புது புது சாதனங்களை கண்டுபிடித்து இலங்கைக்கே பெருமை தேடிக்கொடுப்பேன்.

♣நல்ல விடயங்களை உள்ளடக்கிய கணனியொன்றை சிறுவர்களுக்காக கண்டுப்பிடிப்பேன்.

♣சூரியனிலும் சந்திரனிலும் உள்ள விடயங்களை அறிந்து மக்களுக்கு நேரடியாக வெளிப்படுத்த ஓர் புதிய செய்மதி யைக் கண்டுப்பிடிப்பேன்.

♣சுனாமி ஏற்படவுள்ள பிரதேசத்தை பாதுகாக்க கடலிற்குள் வைக்க ஓர் புதிய கருவியைக் கண்டு பிடிப்பேன்.

**ஜெகதீஸ்வரன் தனுஸ்கா**

# பொது அறிவு



01. அன்னை திரேசா பிறந்த நாடு எது?' **அல்போனியா**
02. நைல் நதியின் அமைவிடம் எது? **ஆபிரிக்கா**
03. சர்வாதிகாரி ஹிட்லரின் படைகள் எந்த நாட்டில் தோற்கடிக்கப்பட்டனர்? **ரஷ்யா**
04. அமெரிக்க ஜனாதிபதி ஒருவரின் பதவிக் காலம் எத்தனை ஆண்டுகள்? **நான்கு ஆண்டுகள்**
05. இலங்கையின் நீளமான ஆறு எது? **மகாவலிகங்கை**
06. சிறிமாவோ – சாஸ்திரி ஒப்பந்தம் எந்த ஆண்டில் கைச்சாத்தானது? 1964ம் ஆண்டு

**ஸ்ரீதரன் அபிநயா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறார்களின் கலைவிழா நிகழ்வுகள்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்காட்சி நிகழ்வுகள்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறப்புப் பெயர்கள்



இருண்ட கண்டம்-ஆபிரிக்கா

மத்திய தரைக்கடலின் திறவுகோல்-ஜிப்ரோல்ரர் நீரிணை

பொற்கதவு நகரம் - சன்பிரான்சிஸ்கோ (அமெரிக்கா)

| | | |
|---|---|---|
| ஐரோப்பாவின் போர்க்களம் | - | பெல்ஜியம் |
| ஐரோப்பாவின் கோழிக்கூடு | - | நெதர்லாந்து |
| கருங்கல் நகரம் | - | அபர்தீன் (ஸ்கொட்லாந்து) |
| பொற்கோவில் நகரம் | - | அமிர்தசரஸ் (இந்தியா) |
| அழியாத நகரம் | - | ரோமாபுரி |
| உலகத்தின் கூரை | - | திபெத் |
| அதிகாலை அமைதி நாடு | - | கொரியா |

**அருட்செல்வம் அக்ஷயா**

## பொது அறிவு



01. உலகின் மிக நீளமான நதி எது?
**நைல் நதி**

02. பனிக்கட்டிகளால் சூழப்பட்ட கண்டம் எது?
**அந்தாட்டிக்கா**

03 விண்வெளியில் பயணம் செய்த முதல் இந்தியப் பெண் யார்?
**கல்பனா சாவ்லா**

04 முதன் முதலில் செயற்கைக் கோளை அனுப்பிய நாடு எது?
**ரஷ்யா**

05 சத்திய சோதனை என்ற நூலை எழுதியவர் யார்?**மகாத்மா காந்தி**

06. கலிலியோ கலிலி எதை கண்டு பிடித்தார்?
**தொலைநோக்கியைக் கண்டுபிடித்தார்.**

**இராஜேந்திரம் வான்மதி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்து கொள்வோம்



- மனிதனின் நாவில் 3000 சுவை மொட்டுகள் உள்ளன.
- திமிங்கிலத்துக்கு ஒரு சுவை மொட்டு உண்டு.
- பன்றிக்கு 5,500 சுவை மொட்டுகள் உள்ளன
- பசுவுக்கு 35,000 சுவை மொட்டுகள் உள்ளன.
- மானுக்கு 60,000 மொட்டுகள் உள்ளன.
- மீன்களுக்கு உடல் முழுவதும் சுவை மொட்டுத்தான்
- வண்ணத்துப் பூச்சி சுவையைக் காலாலும் பாம்புகளும், ஊர்வனவும் வாயின் மேற்புறத்தில் அமைந்துள்ள சிறு உறுப்பின் மூலமும் சுவையை அறியும்.

**குணபாலசிங்கம் ஆதினி**

# தெரிந்து கொள்வோம்



- இலங்கையின் சொத்துரிமை தொடர்பில் கொண்டுவரப்பட்ட சட்டம் எது?
  தேச வழமை சட்டம்
- பாலைவனக்கப்பல் என அழைக்கப்படுவது எது?
  ஒட்டகம்
- பாம்பை செல்லப் பிராணியாக வளர்க்கும் நாடு எது?
  ஹொங்கொங்
- ஐந்தாண்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்திய நாடு எது?
  ரஷ்யா
- எந்த நாட்டில் பெயின்ட் கண்டு பிடிக்கப்பட்டது?
  இங்கிலாந்து
- பிரிட்டிஷ் பிரதமரின் பெயர் என்ன?
  டேவிட் கமரூன்
- சமுத்திரங்களில் மிகப் பெரியது எது?
  பசுபிக் சமுத்திரம்
- உலகில் மிகப் பெரிய அஞ்சல் துறை கொண்ட நாடு எது?
  இந்தியா

**வரதகுமார் தர்சனா**



